1970 செப்டம்பர் 5]

வரத்தில் மீன் தோணித்துறை ஒன்று கட்ட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பணி பொதுப்பணித் துறையால் நிறைவேற்றப் பட்டு வருகிறது.

* 240 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the slipway at Fishing Harbour at Tuticorin is to be constructed now; and

(b) the stage at which the matter stands at present?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) கப்பல் கட்டும் துறைச் சாய்தளம் (Slipway) கட்டு வதற்குரிய ஒப்பந்தப்புள்ளிகளே தலைமைப்பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை வரவழைத்துள்ளார்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத் திற்கு என்ன செலவாகும் என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டிருக் கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 6.2 லட்ச ரூபாய்.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, இந்த ஃபிஷிங் ஹார்பர் கட்டுவதுபற்றி அங்குள்ள மீனவர்கள் அந்த ஹார்பரைக் கொஞ்சம் தள்ளி வைக்கவேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்கு அனுப்பி யுள்ளார்களா? ஆம் எனில், அதுபற்றிய பரிசீலனை முடிந்துள்ளதா? எந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அவர்களது கோரிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. வேறு இடம் அவர்களுக்குப் பார்த்துக் கொடுத்தும் அவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. வேறு இடம் பார்த்துக்கொடுப்பதுபற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

பருத்தி சாகுபடியாளர்களுக்கு கடன்

*241. வினு—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தாலூக்காவில் 1969-ம் ஆண்டில் பருத்தி சாகுபடியாளர்களுக்கு உரக்கடன் காலாகாலத்தில் அளிக்கப்பட வில்லை என்பது உண்மையா?

(இ) தாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) 1969–70-ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில் பட்டியை மையப்பணியிடமாக கொண்டு தீவிர பருத்தி சாகுபடி திட்டத்தைச் செயலாக்க 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத